an International CBSE Finger Print School
Coimbatore

# இயல் 2.2 - சிறகின் ஓசை

GRADE- VI

QUESTION BANK

## அ) குறுவினா.

1. **‘வலசைபோதல்’ என்றால் என்ன?**

விடை: பறவைகள் இடம் பெயர்தலை ‘வலசைபோதல் ‘ என்பர்.

2. **பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?**

விடை:

உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம் இவற்றிற்காகப் பறவைகள் இடம் பெயர்கின்றன.

3. **வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?**

விடை:

**வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள்**

- பறவையின் தலையில் சிறகு வளர்தல்,
- இறகுகளின் நிறம் மாறுதல்,
- உடலில் கற்றையாக முடி வளர்தல் போன்ற மாற்றங்கள் ஏற்படுகிறது

## சிறுவினா

1. **சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.**

விடை:

- சிட்டுக்குருவி கூடு கட்டி வாழும் பறவையினத்தைச் சார்ந்தது. கூடுகட்டும் காலங்களில் சத்தமிட்டுக் கொண்டே இருக்கும்.
- கூடுகட்டிய பின் மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும். பதினான்கு நாள்கள் அடைகாக்கும். பதினைந்தாம் நாளில் குஞ்சுகள் வெளிவரும்.
- துருவப் பகுதிகள் தவிர மனிதன் வாழும் இடங்களில் எல்லாம் சிட்டுக்குருவிகளும் வாழ்கின்றன .
- இந்தியா முழுவதும் சிட்டுக்குருவிகளைக் காணலாம். இமயமலைத் தொடரில் 4000 மீட்டர் உயரத்தில் கூட இவை வாழ்கின்றன.
- தானியங்கள், புழுபூச்சிகள், மலர் அரும்புகள், இளந்தளிர்கள், தேன் போன்றவை சிட்டுக் குருவிகளின் உணவாகும்.
- சிட்டுக்குருவியின் குஞ்சுகள் பெரும்பாலும் புழு, பூச்சிகளையே உட்கொள்ளும். அதனால், தாய்க்குருவி புழு பூச்சிகளைப் பிடித்துத் தம் குஞ்சுகளுக்கு ஊட்டிவிடும்.
- சிட்டுக்குருவியின் வாழ்நாள் பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகள் ஆகும்.
- சிட்டுக்குருவி உருவத்தில் சிறியது. ஆனாலும் வேகமாகப் பறக்கும்.

**2. கப்பல் பறவை பற்றி எழுதுக.**

**3. ஆண் சிட்டுக்குருவிக்கும் பெண் சிட்டுக்குருவிக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை எழுதுக.**